**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>C.C. No. 12-2025</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கல்வி | Date | : | 04.11.2025 |
| Husband Name | : | கனகராஜன் | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1. நான் பள்ளியில் தலைமையாசிரியராக வேலை பாரத்து கடந்த 2023ல் ஓய்வு பெற்றுள்ளேன். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவர் மூலம் தான் தெரியும். எனது கணவர் மீன் வியாபாரம் செய்து வருகிறார். எதிரியை எனது கணவருக்கு நேரடியாக தெரியாது. எதிரியின் தாய் மாமா வகாப் என்பவரை எனது கணவருக்கு மீன் வியாபாரம் மூலமாக தெரியும். அவர் மூலமாக எதிரியை தெரியும். எதிரியை எனது கணவருக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. நான் எதிரிக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் எனது கணவர் தான் ரூ. 10 லட்சம் கொடுத்தார். எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்றால் தேதி மாதம் நினைவில் இல்லை. 2017ம் ஆண்டு கொடுத்தார். பணம் கொடுத்த சமயத்தில் அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் எனது கணவர் வியாபாரம் செய்யும் இடமான ஜகதாம்பட்டிணத்தில் கொடுத்ததால் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் எதிரிக்கு பணமாக கொடுத்தாரா அல்லது வேறு எந்த முறையில் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லும் சமயத்தில் எனக்கு மாத வருமானம் எவ்வளவு ரூ.97,000/- ஆகும். நான் அதற்கு வருமான வரி

செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். தொகை கொடுக்கும் போது நிரப்பப்படாத கைபொப்பம் மட்டும் செய்துள்ள காசோலையை பெறும் வழக்கம் உள்ளதாக என்றால் இல்லை. எனது கணவர் எதிரக்கு கொடுத்து தொகையில் நான் எந்த தொகையாகையாவது எனது கணவரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 1 ஆவணம் 03.07.2021ல் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 2018ம் வருடம் ஜனவரி மாதம் எதிரிக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எதிரி கொடுத்த காசோலை தேதி 17.11.2023 என்றால் சரிதான். மசாஆ 1ல் எதிரி பணத்தை திருப்பி கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கும் காசோலை தேதிக்கும் இடையில் 2 ½ வருட காலம் உள்ளது என்றால் சரிதான். அந்த 2 ½ வருட காலத்தில் நான் எதிரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அந்த சமயத்தில் எனது மகளுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து இறந்துவிட்டதால் என்னால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

4. மசாஆ 1 ஆன ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் எனது கணவர் தான் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதால் அவரிடம் தான் நான் கேட்க வேண்டும். எதிரி எனக்கு எத்தனை காசோலைகள் கொடுத்தார்கள் என்றால் என்னிடம் 1 காசோலையும் எனது கணவரிடம் 1 காசோலையும் கொடுத்தார். அந்த காசோலையை எப்போது எதிரி கொடுத்தார் என்றால் 2023ம் ஆண்டு கொடுத்தார். தேதி மாதம் நினைவில் இல்லை. மசாஆ 4 ஆவணம் எதிரி கொடுத்த காசோலை என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் செய்யப்பட்டுள்ள மையும் நிரப்பப்பட்டுள்ள மையும் வேவ்வேறானவை என்றால் சரிதான். மசாஆ 1ல் எதிரியின் கையொப்பம் தமிழிலும் மசாஆ 4 ஆன காசோலையில் எதிரியின் கையொப்பம் ஆங்கிலத்திலும் உள்ளது என்றால் சரிதான்.

5. எதிரி அரசு வேலையில் இருந்ததால் அவர் தமிழில் கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த தொகையும்

பெறாததால் அவர் எனது பெயருக்கு காசோலையை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஒரே காசோலையாக கொடுத்தால் பணம் எடுப்பதற்கு சிரமமாக இருப்பதால் இரண்டு காசோலைகளை கொடுத்தார். எனது கணவருக்கும் எதிரியின் தாய்மாமா முபாரக்கிற்கும் பேச்சு வார்தைஉள்ளதா என்றால் உள்ளது. தற்போது எதிரிக்கும் அவரது தாய் மாமாவிற்கும் பிரச்சனை உள்ளதால் அவரது தாய் மாமாவின் தூண்டுதலின் பேரில் எதிரி மீது இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி குளிர்பான டீலர் ஷிப் எடுத்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த மசாஆ 6 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் காசோலை எண் மற்றும் தேதியை வேண்டும் என்றே குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**